வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வம் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : | முத்து | தொழில் | : | சுயதொழில் |
| ஊர் | : | வடுகபட்டி | வயது | : | 48/2024 |

<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 13.12.2024.

<u>அரசு தரப்பில் 6ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் வடுகபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 1ம் எதிரி வீரமுத்து எனது டிரைவர் ஆகும். அவர் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதாக என்னிடம் சொன்னார்கள். ஆஜர் 2 மற்றும் 3 எதிரிகளை எனக்கு தெரியாது. கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாக தெரிந்த பிறகு வீரமுத்து என்னிடம் வேலைக்கு வரவில்லை. TN–63–4304 என்ற எண் கொண்ட TVS Star City இரு சக்கர வாகனத்தை எனது தேங்காய் கோடவுனில் உள்ள அனைத்து வேலையாட்களும் எடுத்து செல்வார்கள். மேற்படி எனது இரு சக்கர வாகனத்தை இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் கைப்பற்றி சென்றார்கள், தற்போது அந்த வாகனம் தென்கரை காவல் நிலையத்தில் உள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன சாட்சியம் அனைத்தும் போலீசார் என்னிடம் சொல்லிக் கொடுத்து சொன்னதுதான் என்றால் சரியல்ல. இந்த வழக்கு

விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் முதல் விசாரணையில் சொன்னதை தவிர வேறு விவரம் தெரியாது. எனது இரு சக்கர வாகனத்தை பற்றி நான் சொல்லியதெல்லாம் வழக்கை வலுப்படுத்துவதற்கு சொன்னேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியை எனக்கு பிடிக்காததால் நான் வேலையை விட்டு அவரை நிறுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக யார்,எப்போது, எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலீசார் கோடவுனில் வைத்து விசாரித்தார்கள், தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்கிறார்கள்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
13.12.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | தாலுக்கா | : பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : கருப்பையா | தொழில் | : வாட்ச்மேன் |
| ஊர் | : டி.கள்ளிப்பட்டி | வயது | : 72/2024 |

<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 13.12.2024.

<u>அரசு தரப்பில் 7ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் பெரியகுளம் கள்ளிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது வாசு இண்டேன் கேஸ் கோடவுனில் வாட்ச்மேனாக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு அண்ணாமலை தேங்காய் கோடவுனில் 4 வருடங்களாக வாட்ச்மேனாக பணியாற்றி வந்தேன். சுமார் 6 மாதத்திற்கு முன்பு தான் வாசு இண்டேன் கேஸ் கோடவுனில் வாட்ச்மேனாக பணியாற்றி வருகிறேன். ஆஜர் 1ம் எதிரி வீரமுத்துவை தெரியும், ஆஜர் 1ம் எதிரி என்னுடன் அண்ணாமலை தேங்காய் கோடவுனில் டிரைவராக பணியாற்றி வந்தார். ஆஜர் 2 மற்றும் 3 எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள், நான் எதுவும் தெரியாது என்று சொன்னேன்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அரசு தரப்பில் அறிவிக்கக்கோரி குறுக்கு விசாரணை செய்ய கூடுதல் அரசு குற்ற வழக்கறிஞர் அனுமதி கோரினார், சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 02.02.2022 ம் தேதி நான் அண்ணாமலை கோடவுனில் வாட்ச்மேனாக இருந்தபோது, வீரமுத்து எங்கள் ஓனருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தை இரவு வந்து நிறுத்தி விட்டு சென்றார் என்றும், நான் எங்கு போற என்று கேட்டதற்கு தண்ணி அடிக்க செல்வதாக சொன்னார் என்றும், சிறிது நேரம் கழித்து நடந்து வந்து, அவர் நிறுத்திய எங்கள் ஓனருக்கு சொந்தமான பைக்கை எடுத்துச் சென்றார் என்றும் சொல்லிவிட்டு எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1, 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
13.12.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.